மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) அரசு பங்கு மூலதனம் ரூ. 2.00 இலட்சம்.

(ஆ) விரைவில் கட்டுமானப் பணி துவங்கும்.

திரு. ஜே. ஹேமசந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்கான கால் கோள் நடு விழா 13-6-1983 அன்று நடைபெற்றது என்றாலும், இன்று வரையில் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அந்தக் காலதாமதத்தைத் தவிர்த்து, உடனடியாக கட்டிடங்களை ஆரம்பிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய தற்போதைய மதிப்பீடு ரூ. 34 இலட்சமாகும். இதற்கான நிலம் 21-2-1983-ல் வாங்கப்பட்டது. திருத்திய திட்டத்தின்படி கட்டிட வரைபடம் மற்றும் மதிப்பீடு ஏற்கப்பட்டு, இத்துறையின் கட்டுமானப் பிரிவில் இருக்கிறது. இந்தத் திட்டத்தினை 1984-85 ஆம் ஆண்டில் முடிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தொண்டாமுத்தூரில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்கான கட்டிடம் கட்டும் திட்டம்.

381 (*வினா எண். 17786) திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர், பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்கான கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) தொண்டாமுத்தூர் தொகுதி சின்னத்தடாகம் பிற்பட்டோர் நல மாணவியர் விடுதிக்குக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) இல்லை.

(ஆ) இல்லை.

திரு. மா. சின்னராசு : என்னுடைய தொண்டாமுத்தூர் தொகுதியில் கடந்த 10 ஆண்டுகாலமாக பிற்பட்டோர் நல விடுதி நடந்து வருகிறது. இது ஒரு வாடகைக் கட்டிடத்தில் நடந்தது. அதையும் சென்ற ஆண்டு அதனுடைய உரிமையாளர் அதைக் காலி செய்யவேண்டுமென்று கேட்டு, தற்போது வசதி குறைந்த கொட்டகையில் நடந்து வருகிறது. ஆகவே அங்குள்ள மாணவர்களின் வசதிகளை கருத்தில் கொண்டு, விரைவில் தொண்டாமுத்தூரிலும், சென்ற ஆண்டு துவங்கப்பட்ட மாணவியர் விடுதிக்காக சின்னத்தடாகத்திலும் விடுதிகளை கட்டுவதற்கான உத்தரவை அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் தொண்டாமுத்தூரிலும், சின்னத்தடாகத்திலும் கட்டிடங்கள் கட்டுகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. எனவே இந்த ஆண்டு அது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

(முற்பகல் 10–10)

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சரிடம் இதற்காக கோரிக்கை வைத்த போது, அது பரிசீலனையில் இருக்கிறது என்று எனக்குப் பதில் வந்திருக்கிறது. ஆகவே இப்போதாவது அதைத் தீவிரமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, இந்த ஆண்டு, அதற்கான கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன். அத்தோடு, தமிழக அரசு பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக, சென்ற ஆண்டு எத்தனை விடுதிகள் கட்டியிருக்கின்றன என்ற விவரத்தையும் அளிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களும், மாணவியர்களும் தங்கி கல்வி பயில வசதியாக இருக்கும் பொருட்டு, பிற்படுத்தப்பட்ட, மற்றும் டி. அன்ட் சி, மாணவர்கள், மாணவியர்களுக்காக 36 விடுதிகள் கட்டிக்கொண்டு வருகிறது. 1981–82-லேயிருந்து, 1982–83 வரை, 11 விடுதிகள் கட்ட, 94.45 இலட்சம் ரூபாயை அரசு அனுமதித்து விடுதிகள் கட்டும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இந்த தொண்டாமுத்தூர், சின்னத்தடாகத்தில் மாணவர்கள் விடுதிக்கான கட்டிடம் கட்டுவதற்கு இந்த ஆண்டு தீவிரமாக அரசு பரிசீலனை செய்து முடிவு செய்யும்.

[1984 மார்ச் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

உறுப்பினர்கள் விடுதிக்குமுன் நிறுத்தப்படுகிற வாடகை ஆட்டோ, கார் ஓட்டுநர்களின் நடத்தை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள், இரெ. இராசமாணிக்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், ஜே. ஹேமச்சந்திரன், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் ''சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்கும் விடுதியின் முன் நிறுத்தப்பட்டுள்ள வாடகைக் கார் டிரைவர்கள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் அழைக்கும் இடத்திற்கு வர மறுப்பதோடு, மீட்டர் கட்டணமும் வாங்குவதில்லை. கேட்கும் சட்டப் பேரவை உறுப்பினர்களைக் கேவலமாகப் பேசுவதோடு டிரைவர்கள் ஒன்று சேர்ந்து மிரட்டவும் செய்கிறார்கள். சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய அவசியம் குறித்தும், ஆட்டோ வாடகைக்கார் நிறுத்தும் இடம் மாற்ற வேண்டிய அவசியம் குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தைமொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்து உள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்கும் விடுதியின் முன்பு நிறுத்தப்பட்டு இருக்கும் வாடகைக் கார் டிரைவர்கள், முறை தவறி நடக்கிறார்கள் என்பதைப் பற்றி இந்த அவையில் விவாதிக்க வேண்டும் என்று நான் 6—3—84 அன்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு தலைவர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். அதன் மீது இன்றைய தினம் எங்களுடைய கருத்துக்களைக் கூறுவதற்காக அனுமதி அளித்தமைக்கு ஆரம்பத்தில் நான் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.